REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The: "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 24உ வியாழன் (10—10—57) ★ ☆ வெளியூர்: புரட்டாசி 25உ வெள்ளி (11—10—57) [இதழ் 101

நெய்வேலியில் ரூ. 8 கோடிவரை செலவாகியுள்ளதாம்!

புதுடில்லி, அக். 9—

1957 ஜூலை முடிய நெய்வேலி நிலக்கரித் திட்டத்திற்கு ரூ. 8 கோடிவரை செலவாகியுள்ளது என்றும், நிலக்கரி தோண்டும் வேலை 1960-ம் ஆண்டில்தான் துவங்கும் என்றும் கூறப்படுகிறது.

தாளமுத்து கொலை வழக்கில் தீர்ப்பு:

கம்யூனிஸ்டுத் தலைவருக்கு தூக்குத் தண்டனை

நீதிராசனுடன் மற்றும் இருவருக்கும் அதே கதி

மேலும் இருவருக்கு ஆயுள் தண்டனை விதித்தும், ஐந்து பேர்களை விடுதலை செய்தும் நெல்லை நீதிபதி தீர்ப்பு

நெல்லை, அக். 9—

தூத்துக்குடி தி. மு. கழக முன்னணி வீரரும், தொழிற்சங்கத் தலைவருமான தோழர் தாளமுத்து அவர்கள் கடந்த மே திங்களில் கொலை செய்யப்பட்டதையொட்டி 10 பேர் மீது தொடரப்பட்ட வழக்கில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் நீதிராசன், இராமநாதன், செந்தூர்பாண்டியன் ஆகிய மூன்று கம்யூனிஸ்டுகளுக்கும் வழக்கை விசாரித்த திருநெல்வேலி அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி ஈ. ஆதி கேசவன் அவர்கள் தூக்குத்தண்டனை விதித்துள்ளார்.

மற்றும் இரு எதிரிகளான செந்தூர், செல்லையா நாடார் என்ற இருவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

அருணாசலபணிக்கர், எஸ். நடராசன், சேஷய்யா, சேவியர், அதிரசம் என்ற இராஜபாண்டியன் என்ற ஐவர் மீதும், குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று கூறி, அவர்களை நீதிபதி விடுதலை செய்திருக்கிறார்.

நீதிராஜன் என்பவர் தூத்துக்குடி கம்யூனிஸ்டு தலைவர் அவர், குற்றஞ்சாட்டப்பட்ட இதர கம்யூனிஸ்டுகளுக்கு (சிலர் அனுதாபிகளாம்)த் தலைமை தாங்கி, கடந்த மே 22-ந் தேதியன்று பட்டப்பகலில், நகரவீதி ஒன்றில், நண்பரான ராஜா என்பாருடன்வந்துகொண்டிருந்த தி. மு. கழக முன்னணி வீரர் தாளமுத்து அவர்களைக் கொடிய ஆயுதங்களால் தாக்கிப் படுகொலை செய்தனர் என்றும் போலீசார், அவர்கள்மீது வழக்குத் தொடுத்திருந்தனர்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கம்யூனிஸ்டு தலைவரான நீதிராசன் முதலியோருக்கு, தாளமுத்து, மற்று தாக்கப்பட்ட ராஜாமீது பலநாள் பகை இருந்ததாகவும் வழக்கின்போது எடுத்துரைக்கப்பட்டது.

செயற்கைச் சந்திரன்

பூமிக்குக் கொண்டுவர முயற்சிக்கப்படுகிறதா?

லண்டன், அக். 10—

செயற்கைச் சந்திரன், அதனுடன் அனுப்பப்பட்ட எல்லா சாதனங்களுடனும் திரும்பப் பூமிக்கு கொண்டுவருவதற்கான வழிகளை சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து வருவதாக செய்தி ஒன்று கூறுகிறது.

செயற்கைச் சந்திரனின் ஆயுள் முடிந்து கொண்டிருப்பதாகவும், அது பூமியை நோக்கி விழுந்து கொண்டிருப்பதாகவும், வாயு மண்டலத்தை அது நெருங்கியதும் எரிந்துவிடும் என்றும் கேம்பிரிட்ஜ் விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நேற்று பூமிக்கு 250 மைல் உயரத்தில் பறந்து கொண்டிருந்த இயற்கைச் சந்திரன், இன்று 186 மைல் உயரத்தில் பறந்து கொண்டிருப்பதாக மற்றொரு செய்தி கூறுகிறது.

குருஷேவ் பெருமிதம்!

மாஸ்கோ, அக். 8—

கண்டங்களைத் தாக்கக்கூடிய ஆயுதங்களை ரஷ்யா தயாரித்து வருகிறது என்றும், அதிக சக்தி வாய்ந்த ராக்கெட் குண்டுகள் ரஷ்யாவிடம் உள்ளன என்றும், மனித சக்தியால் இனி இவைகளைத் தாக்கமுடியாது என்றும், வெடி விமானங்களின் காலம் முடிந்துவிட்டது என்றும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் குருஷேவ் பெருமையாகப் பேசியுள்ளார்.

ராக்கெட் குண்டுகள் மிகவும் கருணையில்லாதவையாம்; எனவே, அதைத் தவறானமுறையில் பயன்படுத்தப்படமாட்டாது என்றும், செயற்கைச் சந்திரன், ராக்கெட் குண்டுகளை எல்லா நாடுகளின் கட்டுப்பாட்டிற்கும் விடத் தயார் என்றும், இன்னும் 120 செயற்கைச் சந்திரன்களை விடுவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

'அமெரிக்காவுக்கு ஆபத்து இல்லை'

செயற்கைச் சந்திரன் பற்றி ஐசனேவர் கருத்து

வாஷிங்டன், அக். 10—

"ரஷ்யாவின் செயற்கைச் சந்திரனால் அமெரிக்காவுக்கு எந்த வித ஆபத்தும் இல்லை" என்று அமெரிக்கத் தலைவர் ஐசனேவர் கருத்தறிவித்துள்ளார்.

சோவியத் விஞ்ஞானிகளை அவர் பாராட்டிவிட்டு, அமெரிக்கா தனது செயற்கைச் சந்திரனை டிசம்பரில் விடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளதை நினைவுபடுத்தியுள்ளார்.

வானத்தில் 1,000 மைலுக்கு மேல் 4,000 மைல் உயரம் வரை செல்லக் கூடிய ராக்கெட்டுகளை அமெரிக்கா செலுத்தக்கூடும் என்று அமெரிக்க விமானப்படை அதிகாரி ஒருவர் தெவித்துள்ளார்

வீடுகள் கட்டுவதற்கு அரசாங்க உதவி

சட்ட நகலை ஆராய்வதற்கு அமைச்சர்கள் மாநாடு

புதுடில்லி, அக். 9—

வீடுகள் கட்டும் இலாகாக்களை நிர்வகித்துவரும் அமைச்சர்களின் மாநாடு ஒன்று அக். 31-ந் தேதி முதல் நவம்பர் 2-ந் தேதி வரை மத்திய அமைச்சர் கே. சி. ரெட்டி தலைமையில் மைசூர் மாநிலத்தில் நடைபெறும் என்று தெரியவருகிறது.

வீடுகள் கட்டுவதற்கான தனி நிறுவனங்கள் அமைப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள சட்டத்தின் நகல் இந்த மாநாட்டில் ஆராயப்படுமாம்.

நார்வே பொதுத் தேர்தல் முடிவுகள்

கம்யூனிஸ்டுகள் தோல்வி

ஆஸ்லோ, அக். 8—

நார்வே கடந்த 21 ஆண்டு காலமாகத் தொழிற்கட்சி ஆதிக்கத்தில் இருந்துவருகிறது. கடந்த பொதுத்தேர்தல் 1953-ல் நடைபெற்றபின் மீண்டும் மறு தேர்தல் நேற்று நடைபெற்றுள்ளது.

சட்டமன்றத்தில் உள்ள 150 இடங்களில் தொழிற் கட்சியினருக்கு 78 இடங்கள் கிடைத்துள்ளன.

இந்தத் தேர்தலில் கம்யூனிஸ்டுக் கட்சியினருக்குப் பெருந்தோல்வி ஏற்பட்டுள்ளது.

கோரிக்கையை வற்புறுத்த நகரை இருட்டடித்தனர்!

காட்மண்டு, அக். 9—

நேபாளத்தில் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்த காட்மண்டு பள்ளத்தாக்கிலுள்ள 'பட்டண்' என்ற நகர மக்கள் இன்றிரவு விளக்குகளை அணைத்து நகரை இருள்சூழச் செய்தனராம்!

அமெரிக்காவில் கனா அமைச்சர்...

நிறவெறிக்கு ஆளான சோகக் கதை

நியூயார்க், அக். 9—

அண்மையில் விடுதலை பெற்ற கனா நாட்டின் நிதி மந்திரியை அமெரிக்கர்கள், நிறவெறி காரணமாக அவமானப்படுத்தியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

கே. ஏ. பெதமா என்ற அந்த மந்திரி, அமெரிக்கா மெரிலாண்டில் உள்ள உணவு விடுதி ஒன்றிலிருந்து வெளியேற்றப்பட்டாராம், அவர் ஒரு நீக்ரோ என்பதனால்!

இது குறித்து அவர் கூறுவதாவது:—

"கனா வரும்போது, அமெரிக்காவின் உதவிக் குடியரசுத் தலைவர் என் வீட்டில் உணவு அருந்துகிறார்; அட்லாய் ஸ்டிவன்சன் என் வீட்டிற்கு வருகிறார். அவ்வாறிருக்க, என்னை மட்டும் இங்கு ஏன்தான் இப்படி நடத்துகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை; நான் யார் என்பதைக் கூறியபின்னும்கூட என்னை வெளியேறுமாறு கட்டாயப்படுத்தினர்; நான், அமைதி காத்துத் திரும்பிவிட்டேன்."

★★

அக்டோபர் 13: இந்தி எதிர்ப்பு நாள்

பொதுக்கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள்

☆

1. திராவிடத்தின்மீது இந்தியை நேரிடையாகவும் மறைமுகமாகவும் திணிப்பதானது, தென்னாட்டவரை வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு நிரந்தர அடிமைகளாக்கும் சூழ்ச்சிமிக்கத் திட்டம் என இக்கூட்டம் கருதுகிறது.
2. மக்களின் கவனம் வேறு பக்கங்களில் திருப்பப்பட்டிருந்த நேரத்தில், ஆளும் கட்சியினர் எதேச்சாதிகாரமான போக்கில் மிக அவசர அவசரமாக நிறைவேற்றிவைத்துக்கொண்டுள்ள மொழி சம்பந்தமான அரசியல் சட்டம், தென்னாட்டு மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லையாதலால், உடனடியாக அம்மொழி பற்றிய விதி அகற்றப்பட வேண்டும் என இக்கூட்டம் வற்புறுத்துகிறது.
3. தாய்மொழியில் ஆட்சித் துறை, நீதிமன்றத் துறை அலுவல்களை வெற்றிகரமாக்குவதுடன், பிற மாநிலங்களுடனும் உலகுடனும் தொடர்புகொள்ள ஆங்கிலத்தை இப்போதுபோல் தொடர்ந்து பயன்படுத்திக்கொள்வது என்ற கருத்தினை இக்கூட்டம் ஆட்சியாளருக்கு வலியுறுத்துகிறது.

குறிப்பு: அக்டோபர் 13-ம் நாளன்று இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடத்தும் தி. மு. கழகக் கிளைகள்—சார்பு மன்றங்கள்—படிப்பகங்கள் ஆகியவை மேற்கண்ட தீர்மானங்களை கூட்டத்தில் நிறைவேற்றி, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மூன்று படிகளாகத் தயாரித்து, மூன்றிலும் கூட்டத் தலைவரின் கையொப்பம் பெற்று, ஓர் படியைக் கிளைக் கழகத்திற்கு வைத்துக்கொண்டு மீதி இரு படிகளைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

தலைமைக் கழகத்திற்குக் கிடைக்கும் இரண்டு படிகளில் ஒன்றை, நமது கழகப் பாராளுமன்ற உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், தர்மலிங்கம் ஆகியோர் மூலம் இந்திய உள்நாட்டமைச்சர் அவர்களிடம் நேரில் கொடுக்கத் தலைமைக் கழகம் தகுந்த ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★

நாகர்களுக்குத் தனி மாநிலம்

டில்லியின் தீவிர ஏற்பாடுகள்

புதுடில்லி, அக். 9—

குடியரசுத் தலைவருக்காக, அசாம் கவர்னரின் நேரடி ஆட்சியின்கீழ் வரும் வகையில் உத்தேசிக்கப்பட்டுள்ள நாகர்களுக்கான தனி மாநிலம், இந்த ஆண்டு இறுதியிலோ, அடுத்த ஆண்டுத் துவக்கத்திலோ உருவாகும்என்று தெரியவருகிறது.

டெல்லி சர்க்காரின் சார்பில் பண்டித நேரு, இந்த ஏற்பாடு குறித்து அறிவித்ததை ஒட்டி சர்க்கார் அதிகாரிகள், அரசியல் சட்டத்தின் ஆறாவது ஷெட்யூலைத் திருத்துவதற்கான மசோதா தயாரிப்பது உட்பட, அந்த ஏற்பாட்டினை அமுல் செய்வதற்கான எல்லா வேலைகளையும் தீவிரமாகக் கவனித்து வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

மத்திய சர்க்கார் அதிகாரிகளடங்கிய குழு ஒன்றும் இதற்காக அசாமிற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறதாம்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 10—10—57 வியாழன்

‘தாராளமாகக் குடியுங்கள்!’

‘சாராயம் குடிக்கின்றீர்களா? தாராளமாகக் குடியுங்கள்!’ என்று, பொதுமக்களை வருந்தி அழைக்கின்ற காலம், காங்கிரசுக் கட்சியினருக்கு இப்பொழுது வந்திருக்கின்றது. ‘கள்ளைக் குடிக்காதீர்கள்—சாராயக் கடைக்குப் போகாதீர்கள்’ என்றெல்லாம் முழக்கமிட்டவண்ணம் மதுக்கடைகள் முன் நின்று காங்கிரசுக் கட்சியினர் மறியல் செய்த காலம் வெறும் கனவாகிவிட்டது.

‘மதுவை ஒழித்து விட்டோம்—மக்களுக்கு நல்வாழ்வைத் தேடித் தந்துவிட்டோம்’ என்றெல்லாம் பெருமைபடக் காங்கிரசுக் கட்சியினர் பேசி வந்த காலம் மலையேறிவிட்டது.

‘மதுவகைகளை மீண்டும் புகுத்தி மக்களுக்கு நலன்கள் கூட்டப்போகிறோம்’ எனக் காங்கிரசுக் கட்சியினரே குரலெழுப்புகின்ற காலம் பிறந்திருக்கின்றது.

கொரபுட் மாவட்டம் நீங்கலாக ஒரிசா மாநிலம் முழுவதிலும் மதுவிலக்கு ஒழித்துக்கட்டப்படக்கூடும் — அதுவும இன்னும் ஒரு திங்களுக்குள்ளாக என்று செய்தி தரப்பட்டு இருக்கின்றது. ஒரிசா மாநிலத்தின் இரண்டாவது திட்டத்துடன் இம்மதுவிலக்கு ஒழிப்பைத் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. இத்துறையில் மேற்படி மாநில காங்கிரசுக் குழு இறுதியாக முடிவுகட்டும் என்றும் சொல்லப்படுகிறது.

மதுவிலக்கை ஒழிக்க வேண்டும் என ஒரிசா காங்கிரசு ஆளவந்தார்கள் ஏன் கருதுகின்றனர் தெரியுமா? தங்கள் கருத்துக்கு ஆதாரவாக பின்வரும் மூன்று காரணங்களை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மதுவிலக்கிற்கு மக்கள் ஆதரவில்லை.

மதுவிலக்கை செயல்படுத்துவதில் பெருந்தொகை செலவாகிறது.

மதுவிலக்கின் மூலம் கிடைத்துவந்த பெரும் வருமானம் இல்லாமற் போய்விட்டது.

மேற்குறித்த மூன்று காரணங்களையும், ஏதோ புதிதாகக் கண்டுபிடித்துவிட்டவர்கள் போல் ஒரிசா காங்கிரசு ஆளவந்தார்கள் இப்பொழுது சொல்ல வந்திருப்பது வியப்புக்குரியதாகும். மேற்குறித்த மூன்று விளைவுகளும், மதுவிலக்கை செயல்படுத்த முனைவதற்கு முன்பே தெளிவுபடத் தெரிந்திருந்தவைகளேயாகும்.

மதுவிலக்கின் பலனை ஏற்படக்கூடிய இம்மூன்று விளைவுகளையும் உத்தமர் காந்தியார் தெரிந்தே இருந்தார். விளைவுகளைத் தெரிந்தும் கூட, அவர் மதுவிலக்கை சிறந்ததோர் அறநெறி இலட்சியமாகக் கொண்டார். அதன் பலனைத் தொல்லைகளை ஏற்று மதுவிலக்கை செயல்படுத்தியே ஆகவேண்டும் என, அவர் உறுதியுடன் உழைத்தார்.

மதுவிலக்கு பற்றி ஒரிசா காங்கிரசு ஆளவந்தார்களின் உள்ளங்களில் மட்டுந்தான் குழப்பம் உருவெடுத்திருப்பதாகக் கொள்ளக்கூடாது. அந்தக் குழப்பம் மற்ற மாநில காங்கிரசு ஆளவந்தார் உள்ளங்களிலும் இடம் பெற்றுத்தான் இருக்கிறது.

மக்களின் ஆதரவு மதுவிலக்கிற்கு இல்லாததினாலேயே மதுவிலக்கை ஒழிக்க வேண்டும் எனக் கருதுவதாக ஒரிசா காங்கிரசு ஆளவந்தார்கள் குறிப்பிட்டிருப்பது துளியும் பொருந்தாது. பெரும்பான்மையினரான மக்கள் மதுவிலக்கிற்கு என்றும் எதிராக இருந்ததே கிடையாது. மக்கள் தொகையில் குறைந்த எண்ணிக்கையினரே மதுப் பழக்கமுடையவர்களாவர்.

மதுப் பழக்கமுடையவர்களிடமிருந்து மதுவிலக்குக்கு ஆதரவு என்றும் கிடைக்காது. அப்படி அவர்கள் ஆதரவு எதிர்பார்ப்பதும் நகைப்புக்குரியதாகும்.

மதுவிலக்கை செயல்படுத்துவதில் கண்டிப்பாக நிர்வாகச் செலவு இருக்கத்தான் இருக்கும். அதை ஏற்கனவே எதிர்பார்த்துத்தான் மதுவிலக்கு செயல்படுத்தப்பட்டது.

மது விற்பனை மூலம் கிடைத்துவந்த வருமானம் இல்லாதொழிந்துவிடக் கூடும் என்பதை முன்கூட்டியே நன்கு அறிந்துதான், மதுவிலக்கை செயல்படுத்த முன்வந்தனர் காங்கிரசுக்கட்சியினர். அரசாங்கத்திற்குப் பண நட்டம் வந்தாலும் பாதகமில்லை; ஏழை மக்களிடம் நிரம்பப் பணம் மீதமாகும் என்று அப்பொழுது இதே காங்கிரசு ஆட்சியினர்தான் சமாதானம் கூறி வந்தனர். தாங்கள் கூறிவந்தபடியே மதுவிலக்கின் பலனை ஏழைமக்கள் வயிறார உண்ணுகிறார்கள்; வெள்ளி, தங்க நகைகள் அணிந்துவருகிறார்கள்; பட்டு பட்டாடை உடுத்துகிறார்கள்; மீதமாகப் பணமும் வைத்திருக்கின்றார்கள் என்று காங்கிரசுக் கட்சியினர் இதுவரை அழுத்தம் திருத்தமாகப் பேசிவந்துள்ளனர்--இன்றும் அதையே பேசியும் வருகின்றனர்.

ஆனால், ஒரிசா காங்கிரசு ஆளவந்தார்களோ இரண்டாவது திட்டத்தை சுட்டிக்காட்டி மதுவிலக்கை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கூற முனைந்துள்ளார்கள். மதுவிலக்கின் காரணமாக ஏழை மக்களிடம் குவிந்து கிடக்கும் பணத்தைக் கொண்டு இரண்டாவது திட்டத்தை வெற்றிகரமாகச் செயலாற்ற ஒரிசா காங்கிரசு ஆளவந்தார்கள் முன்வருவதுதான் முறையாகும். ஆனால் அவர்களோ, திட்டத்தைச் செயலாற்ற வேண்டுமானால் மதுவிலக்கை ஒழிக்கத்தான் வேண்டும் எனத் துணிந்துகூற முன்வந்துள்ளனர்.

ஒரிசா காங்கிரசு ஆளவந்தார்களின் போக்கு, காந்தியாரின் மதுவிலக்கு இலட்சியத்திற்கு அரண்செய்வதும் ஆகாது—மதிப்பளிப்பதும் ஆகாது. அன்று கள்ளுக்கடைகளை மறியல்செய்து தடியடி, சிறைவாசம் முதலிய அடக்குமுறைகளை மகிழ்வுடன் ஏற்ற காங்கிரசு ஊழியர்கள், ஒரிசா ஆளவந்தார்களின் முடிவைக் கேட்டால் பெரும் சீற்றம் கொள்ளுவர். தங்களைத் தாங்களே நொந்துக் கொள்ளவும் செய்வர்.

அரசியல் சட்டம், மதுவகைகளையும், மயக்கம் தரக்கூடிய போதை வகைகளையும் அறவே விலக்கும் செயலாற்ற வேண்டும் என்று அறிவுரை அளிக்கிறது. ஆனால் ஒரிசாவில் கொலு வீற்றிருக்கும் காங்கிரசு ஆளவந்தார்களோ, அந்த அறிவுரையை அலட்சியம் செய்வதில் கச்சையை வரிந்துகட்டி வருகின்றனர்.

உத்தமர் காந்தியாருக்கும் துரோகமிழைக்கின்றனர் —அரசியல் சட்டத்திற்கும் துரோகமிழைக்கின்றனர் — ஒரிசா காங்கிரசு ஆளவந்தார்கள்!

‘தமிழ்ப் பண்பாட்டுக்கு உரிய நல்ல கருத்துக்கள் இஸ்லாத்தில் உண்டு’

சாதியை மறைத்து சமத்துவமளிக்கும் சிறப்பை அது பெற்றிருக்கிறது’

‘இஸ்லாம் மார்க்கத்தை அறிஞர் பெர்னட் ஷா பாராட்டியது ஏன்?’

நபிகள் நாயகம் விழாவில் அண்ணா விளக்கம்

7—10—57-ல் திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த நபிகள்நாயகம் பிறந்தநாள் விழாப் போதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

“இஸ்லாத்தின் இன்னொரு சிறப்பு, இஸ்லாத்தில் யார் சேர்ந்தாலும் சாதியை மறைத்துவிடுகிறது; முதுகுளத்தூரில் ஒருவர் தலையை ஒருவர் சீவிக்கொள்ளும் தேவர்—தாழ்த்தப்பட்ட மக்களானாலும் சரி, மற்றும் யார் சேர்ந்தாலும் சரி, சாதியை நீக்கிவிடுகிறது, இஸ்லாத்தின் கொள்கை! அதனால், அது, என்னை மிகவும் ஈர்க்கக்கூடிய கொள்கையாக இருக்கிறது.

“இதையெல்லாம் அறிந்துதான், எதையும் துருவித் துருவி ஆராயும் பண்புபடைத்த அறிஞர் பெர்னட்ஷா அவர்கள், ‘உலகில் கடைசிவரை நிலைத்திருக்கக்கூடிய மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம் ஒன்றுதான்’ என்று எழுதியிருக்கிறார்.

“நபிகள் நாயகத்தை ‘மகான்’ என்று ஏன் கொண்டாடுகிறார்களென்றால்—1957-ம் ஆண்டில் சமுதாய விழிப்புவேண்டும் என்பதை எடுத்துச் சொன்னால் எங்களை ஓட ஓட விரட்டுகிறார்கள் என்றால், 1,400 ஆண்டுகளுக்கு முன்பு, பல்வேறு தெய்வங்களை வணங்கிய மக்களிடம், ‘நீ வணங்கும் கடவுள் இதுவல்ல; நீ செல்ல வேண்டிய கோயில் இதுவல்ல’ என்று கூறியவரை விட்டுவைத்தார்களே அதுவும், அந்த மக்களிடம் தன் கொள்கையை நெஞ்சுறுதியோடு எடுத்துச் சொன்னாரே அதுவும்தான் அவரை ‘மகான்’ என்று கொண்டாடக் காரணம். அப்பொழுது நபிகள் கொடுத்த நெஞ்சுரம்தான் இப்பொழுது அவரது மார்க்கத்தைத் தழுவியிருப்பவர்களுக்கு இன்றும் இருக்கிறதென்றால் அது ஆச்சரியமில்லை.

“தமிழ் மக்கள் இஸ்லாமியக் கொள்கையை ஏன் கடைப்பிடிக்கிறார்களென்றால்—2,000 ஆண்டுகளுக்குமுன் பழந்தமிழ் மக்கள் வைத்திருந்த ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ என்ற குழந்தை காணாமல் போய்விட்டது; அதைத் தேடித்தேடி அலைந்தார்கள் தமிழ் மக்கள்; கிடைக்கவில்லை; பிறகு, இஸ்லாத்தில் அந்தக் குழந்தையைக் கண்டார்கள்; தங்கள் குழந்தை அங்கு வளருவதைக் கண்டார்கள்; குழந்தையை இழந்துவிட்ட தாய், தன் குழந்தையை மீண்டும் கண்டதும் எவ்வளவு ஆவலோடு கொஞ்சுவாளோ, அதைப்போல, இன்றையத் தமிழ் மக்கள், ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற கொள்கை இஸ்லாத்திலே காணப்படுவதால் அதைப் பின்பற்றினார்கள்.

“தாய் தன் குழந்தையைக் கொஞ்சுவதைப் பார்த்து, ‘இது என்ன, அந்தக் குழந்தையை அப்படிக் கொஞ்சுகிறாளே’ என்றால், அது, தாய்மை அன்பு அறிந்தவர்களுக்குத்தான் தெரியுமே தவிர, அதை விளக்கிக்கூற முடியாது. தமிழர்களுக்கு—தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்ற பல நல்ல கட்டங்கள் இஸ்லாத்தில் இருக்கின்றன.

“மார்க்கம் என்பது மக்களை ஒன்றுபடுத்துவது—மக்களை அறிவுத் தெளிவுபடுத்துவது—மக்களைத் ஒற்றுமைப்படுத்துவது—அரியபந்தங்களை ஏற்படுத்துவது—நல்ல தோழமையை வளர்ப்பது—சிறந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது; அது, ‘மதம்’ எனச் சென்றால், அது, மக்களை மத மதப்பில் ஆழ்த்தும்; அதற்குப் போலீஸ் தேவைப்படும். மார்க்கநெறியில் நின்றால் மக்கள் அன்பு வழியில் ஒன்றுபடுவார்கள்.

“மதத்தின் பயன் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பது பற்றி நமக்குள் வேறுபாடு இருக்கலாம். ஆகையினாலே யாராவது சிலர் நாஸ்திகர் என்றும், சிலர் ஆஸ்திகர் என்றும் கருதப்பட்டால், அந்தப் பட்டம் ஆஸ்திகர் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள் தங்களுக்கு அவர்களைப் பிடிக்காதக் காரணத்தால், அவர்களுக்கு இட்டபெயர்தானே தவிரவேறொன்றுமில்லை. அதைத் தவிர நாஸ்திகம் என்பது இருந்ததுமில்லை; இனி இருக்கவேண்டிய அவசியமுமில்லை. அப்படியிருந்தாலும் இல்லாவிட்டாலும் நாங்கள், அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதை இப்புனித நாளில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் ஆஸ்திகம் என்பது இயற்கை; இயற்கைக்கு மாறுபட்டு யாரும் இருக்கமாட்டார்கள்.

“இஸ்லாத்து மார்க்கத்தின் மாண்புகளை வேறு நாடுகளில், மேலேயிருப்பவர்கள் கீழேயிருப்பவர்களுக்கு உபதேசம் செய்வார்கள்; ஆனால், நமது நாட்டில் அப்படியிருக்கக் கூடாது. நமது நாட்டைப் பொறுத்தவரையில் கீழேயிருப்பவர்கள்தான் மேலேயிருப்பவர்களுக்கு உபதேசம் செய்யவேண்டும்; அப்பொழுதுதான் கடவுள் தன்மையை எல்லோரும் அறிந்தவர்கள் ஆவார்கள்.

“ஏன் அவ்வாறு சொல்கிறேனென்றால், புகைவண்டி நிலையத்திலிருந்து நாம் குதிரை வண்டியில் வீட்டுக்கு வருகிறோம். நாம் முதலில், இறங்க வேண்டிய இடத்தைச் சொல்லி வண்டிக்காரனிடம் வாடகை பேசுகிறோம் வண்டிக்காரன் நாம் குறிப்பிட்ட தூரம் வந்ததும், அவன், தான் நினைத்ததைவிட தூரம் அதிகமாக இருப்பதாகக் கருதி வாடகையைக் கொஞ்சம் அதிகம் கேட்கிறான்; அப்பொழுது பலர் இயற்கையாகவே என்ன கூறுகிறார்கள்?— ‘அப்பா! கடவுளுக்குப் பொதுவாக நட!’ என்கிறார்கள்; ஆனால், உண்மையாகவே அதிக தூரம் வந்து, நாம் வாடகையைக் குறைத்துக் கொடுத்தால், அப்பொழுது அவன், ‘ஐயா! கடவுளுக்குப் பொதுவாக நடவுங்கள்!; என்றால் அதை எத்தனைப் பேர் பின்பற்றுகிறோம்? உங்களை மனதார எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்—‘கடவுளுக்குப் பொதுவாக’ என்பதை எத்தனைப்பேர் பின்பற்றுகிறோம்?

“ஆகையினாலேதான், நமது நாட்டைப் பொறுத்தவரையில் கீழேயிருப்பவர்கள் மேலேயிருப்பவர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்கிறேன்.

“மதத்தின் மார்க்கத்தில் யாருக்கும் மாறுபாடு இருக்க முடியாது; ஆனால், மார்க்கம் நடைமுறையில் வரும்போது அது மக்களுக்குப் பயன்பட வேண்டும். அதற்கு சுற்றுச் சார்பும், சூழ்நிலையும் அமைய வேண்டும். சூழ்நிலையை மனிதன் உண்டாக்குகின்றான். ஆனால் சுற்றுச் சார்பு எப்படி இருக்கின்றதோ, அப்படியே—அதன் வழியே செல்பவர்கள் கொஞ்சம் சுற்றுச் சார்பு அறிந்தவர்கள். ஆனால் சுற்றுச் சார்புக்கு மாறாக நாம் நடந்தால் தனக்குத் தீமையை அளிக்கும் என்பதைத் தெளிவாக அறிந்தும், கெட்டிருக்கின்ற சுற்றுச் சார்புகளை அழித்து, நல்ல சுற்றுச் சார்புகளை ஏற்படுத்துகின்றானே அவனைத்தான் ‘மகான்’ என்று சொல்லுகின்றோம். ஆனால் அவர்கள் எப்பொழுதும் நமக்குக் கிடைப்பதில்லை; அவர்கள் கிடைக்கும்போது நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட மகான்களில் ஒருவர் நபிகள் நாயகம். அவரைப் போன்ற மகான்கள் நம்மிடையே அடிக்கடி தோன்றுவதில்லை. ஆகையினால், அத்தகையவரின் சிறந்த கருத்துக்களை நாட்டில் பரப்ப நல்ல சுற்றுச் சார்புகள் உருவாக வேண்டும். சுற்றுச் சார்பு நல்ல முறையிலே அமைய மக்களிடத்திலே நல்ல அறிவுத் தெளிவும், அத்தெளிவு ஏற்பட நல்ல கல்வி முறையும், நல்ல கல்வி முறை ஏற்பட நல்ல ஆட்சியும், நல்ல ஆட்சி முறை ஏற்படுவதற்கு நல்ல ஆட்சியாளர்களும் வேண்டும்; நல்ல ஆட்சியாளர்களை ஏற்படுத்த நல்லவர்களை வாழவிடவேண்டும்.

“நபிகள் போதித்த இஸ்லாம் மார்க்கம் வைரம் போன்றது; நல்ல வைரத்தைப் பட்டைதீட்டி, அதைக் கையிலே மோதிரமாகவும் செய்து போட்டுக்கொள்ளலாம்; காதில் கடுக்கனாகவும் அணிந்துகொள்ளலாம்; அதே வைரத்தை விற்று, கிண்டி குதிரைப் பந்தயத்தில் வைத்தும் ஆடலாம். ஆனால் வைரத்தைப் பயன்படுத்துவதிலிருந்துதான், அந்தப் பயனின் தரத்தை அறிந்துகொள்ள முடியும். அதைப்போல, இஸ்லாம் மார்க்கம் என்ற வைரம் யாருக்கு—எந்த இடத்திலே — எப்படிப் பயன்படுகிறது என்பதிலேதான் அதன் மாண்பு உணரப்படும். இதை எண்ணும்போது நல்லவர்கள் கிடைப்பது என்பதுகூட எளிதாகிவிடும். ஆனால் அவர்கள் சொல்லிச் சென்ற கருத்துக்களை பயன்படுத்துவதிலேதான் அதன்

(4-ம் பக்கம் பார்க்க)

கழகச் செய்திகள்

புதிய நிர்வாகிகள் தேர்வு

ஆங்காங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள தி. மு. கழகக் கிளைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் விவரமும், பழைய கிளைகளுக்கான இடைத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய நிர்வாகிகளின் விவரமும் சுருக்கமாக இங்கு தரப்படுகிறது:—

சென்னை 2-வது வட்டம்:

மாவட்டத் துணைச்செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் 4—8—57-ல், நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; செயலாளர்: சி. ஆர். அர்ச்சுனன்; துணைச் செயலாளர்: சி. இளங்கோ; பொருளாளர்: கோ. நீலமுகிலன்; செயற்குழு உறுப்பினர் (நிர்வாகிகள் உட்பட) 17 பேர்; மாவட்டப் பிரதிநிதிகள்: தி. ந. மதிவாணனன், கே. ஈ. சம்பந்த மூ..

சென்னை 33-வது வட்டம்:

2—10—57 காலை 9-30 மணிக்கு, சென்னை 33-வது வட்டக் கிளையின் செயலாளர் தேர்தல் தோழர் அ. ச. சுந்தரமூர்த்தி முன்னிலையில் நடைபெற்றது; தோழர் எம். ஏ. பழனி செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்னை 38-வது வட்டம்:

20—9—57-ல்; தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; செயலாளர்: எம். கே. சாமி; துணைச் செயலாளர்: அ. பிரகாசம்; பொருளாளர்: தா. துரை அரசு; செயற்குழு உறுப்பினர்கள்: தமிழ்மணி, கோவிந்தசாமி, சி. லோகநாதன், எம். பி. எம். யாகூப், ஜி. நரசிம்மலு, கே. எஸ். மணி, தியாகராசன், டி. மாணிக்கம், இராசன், டி. எஸ். மணி; மாவட்டப் பிரதிநிதிகள்: தமிழ்மணி, எம். கே. சாமி.

சென்னை 46-வது வட்டம்

15-9-57-ல், மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது; செயலாளர்: கை. பிரமய்யா; துணைச்செயலாளர்: கே. ஆர். சம்பந்தம்; பொருளாளர்: வவ. பாலசுந்தரம்; மாவட்டப் பிரதிநிதிகள்: அ. டானியல், வ. வில்லவன் கோதை. செயற்குழு உறுப்பினர்கள் 13 பேர்கள்.

சென்னை-திருவொற்றியூர்:

25-8-57-ல், சென்னை மாவட்ட துணைச்செயலாளர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நடந்த திருவொற்றியூர் தி. மு. க. கிளை பொது உறுப்பினர் கூட்டத்தில் தோழர் மா. தட்சிணாமூர்த்தி துணைச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிவகாசி:

சிவகாசி நகர தி. மு. க. கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் 28—7—57-ல், நடந்தபோது, செயலாளர் பொறுப்புக்கு எஸ். ஏ. ரசாக் அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சாத்தூர்:

சாத்தூர் தி. மு. க. கிளையின் செயலாளரான தோழர் எம். நடராசன் சொந்த அலுவல்கள் காரணமாக செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால் அவருக்குப் பதில் தோழர் இரா. சந்திரதாசன் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர் இரா. இராமச்சந்திரன் துணைச் செயலாளராகவும், தோழர் கு. இராசதுரை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

லால்குடி—சிறுதையூர் (9, 10-வது வட்டம்):

செயலாளர்: எஸ். பாலமுத்து; துணைச்செயலாளர்: இரா. கங்காதரன்; பொருளாளர்: அரங்கநாதன்; மாவட்டப் பிரதிநிதி: எஸ். பி. மாணிக்கம்.

அருப்புக்கோட்டை:

22—9—57-ல், இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்தரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற அருப்புக்கோட்டை நகர தி. மு. க. துணைச் செயலாளர் தேர்தலில் தோழர் பி. பி. என். நல்லதம்பி துணைச் செயலாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எம். புதுப்பட்டி:

செயலாளர்: இரா துரைராசு; துணைச் செயலாளர்: இரு. அய்யாத்துரை; பொருளாளர்: யூனூஸ்; மாவட்டப் பிரதிநிதிகள்: ஏ. எம். இஸ்மாயில், எம். எஸ். இராதா; செயற்குழு உறுப்பினர்கள் எட்டு பேர்.

பம்மல்:

26-7-57-ல் அமைக்கப்பட்ட பம்மல் தி. மு. கழகக் கிளையின் நிர்வாகிகள் தேர்வு, ஆனகாபுத்தூர் தி. மு. கழக மாவட்டப் பிரதிநிதி தோழர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. செயலாளர்: கே. ஆர். வேலாயுதம்; துணைச் செயலாளர்: வி. சம்பத்; பொருளாளர்: என். டி. கிருட்டினன்; மாவட்டப் பிரதிநிதி: ப. ந. தம்பித்துரை; செயற் குழு உறுப்பினர்கள் எழு பேர்.

ஆள்கொண்டார்குளம்:

24—8—57-ல், அமைக்கப்பட்ட ஆள்கொண்டார்குளம் (நெல்லை மாவட்டம்) தி. மு. கழகக் கிளையின் நிர்வாகிகள்;— செயலாளர்: தி. ஆறுமுகம்; துணைச்செயலாளர்: சு. கருணாநிதி; பொருளாளர்: சு. இராசா; மாவட்டப் பிரதிநிதி: ம. அழகுமுத்து. செயற்குழு உறுப்பினர்கள்: கூ. ம. மதியழகன், க. அய்யனு, கூ. ம. அழகுமுத்து, ம. செல்லையா, மு. பாண்டியன், ஐ. ஆறுமுகம், ம. பொற்கைமாறன், மா. சிவனு, நா. சங்கர்.

பெருமருதூர் (திருச்சி மாவட்டம்):

செயலாளர்: து, கோவிந்தராமாநுசன்; துணைச்செயலாளர்: ம. க. ஆண்டியப்பன்; பொருளாளர் ம. சீ. முத்தண்ணு; மாவட்டப் பிரதிநிதி: கி. நல்லமுத்து.

பெங்களூர்—சுந்தரநகர்:

பெங்களூர்—சுந்தரநகர் தி. மு. க. கிளை 11—8—57-ல் தோழர் எஸ். வி. பதி தலைமையில் நிறுவப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: வி. கே. நாகலிங்கம்; துணைச்செயலாளர் எம். வரதன்; பொருளாளர்: பி. முருகேசன்; மாவட்டப் பிரதிநிதிகள்: கி. மு. துரைசாமி, ஆர். பொன்னுசாமி.

பம்பாய்—அந்தேரி:

பம்பாய், மரோல்நாக்கா அந்தேரி தி.மு.க. கிளையின் நிர்வாகிகள் தேர்வு 15—8—57-ல் தோழர் கே. சம்பத் தலைமையில் நடைபெற்றது. செயலாளர்: பி. கோவில்; துணைச்செயலாளர் ஈ. முத்தையா; பொருளாளர்: கே. சண்முகம்; செயற்குழு உறுப்பினர்கள்: தே. அ. டிக்குஸ், கே. சம்பத், ஏ. எஸ். வேலன், இரா. காளியப்பன், மு. தானியல், ஆ. செந்தமிழ்ச்செல்வன், பி. அல்லி, எம். வி. இராசு, எஸ். முத்து; மத்தியக்குழு பிரதிநிதிகள்: மு. தானியல், இரா. காளியப்பன்.

பரமக்குடி:

புதிய நிர்வாகிகள் தேர்தல்; இராமநாதபுர மாவட்டச் செயலாளர் இ. ல. ம. சௌந்திர பாண்டியன் தலைமையில் 4—8—57-ல் நடைபெற்றது; செயலாளர்: எம். ஏ. வகாப்; துணைச் செயலாளர்: எஸ். ஆர். இரங்கசாமி; பொருளாளர்: எஸ். தண்டபாணி; மாவட்டப் பிரதிநிதி: நா. நாகலிங்கம். செயற்குழு உறுப்பினர்கள் 17 பேர்.

லால்குடி:

செயலாளரும், மாவட்டப் பிரதிநிதியும்: எல். பி. தங்கவேல்; துணைச்செயலாளர்: என். பி. பரமசிவம்; பொருளாளர்: சா. பெ. தங்கராசன்.

பெங்களூர்—சீராமபுரம்:

4-8-57-ல், தோழர் ஜி. கிருஷ்ணன் தலைமையில் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது:—செயலாளர்: வே. இராமலிங்கம்; துணைச்செயலாளர்: வி. சுப்பிரமணியம்; பொருளாளர்: பி. குப்புசாமி; மாவட்டப் பிரதிநிதிகள்: சு. கண்ணன், செ. செழியன்; செயற்குழு உறுப்பினர்கள்: இரா. மாணிக்கம், ஏ. வேலாயுதம், கே. எஸ். பானு, எஸ். முனிசாமி, ஜீ. பீமன், டி. எம். அண்ணாமலை, பி. பெருமாள், எம். சுப்பிரமணி, ஜி. கண்ணன், வி. சின்னப்பா, மு. வீரப்பன், ஓ. அண்ணியப்பன்.

* * *

கழகத் தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகள் தேர்தல் பற்றிய செய்திகள், மாவட்டச் செயலாளரின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டால்தான் 'நம் நாடு' இதழில் வெளியிடப்படும் என்று பொதுச்செயலாளர் விடுத்திருக்கும் அறிக்கையை நினைவில் கொண்டு, கிளைக் கழகத் தோழர்கள் அந்தச் செய்திகளை மாவட்டக் கழகச் செயலாளர் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

* * *

சேலம்-பெங்களூர் இரயில்பாதை

2-வது திட்டத்தில் சேர்க்கக் கோரிக்கை

சேலம், அக். 1—

சேலம் இரயில் பிரயாணிகள் சங்கக் கூட்டம் டாக்டர் பி. ஏ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

சேலம் செங்கோட்டை பிரயாணிகள் போகியை அக். 1-ந் தேதி முதல் ரத்து செய்ததற்காக வருத்தம் தெரிவித்தும், அந்தப் போகிவண்டியை மீண்டும் விடுமாறு இரயில்வே இலாகாவைக் கோரியும் தீர்மானம் நிறைவேறியது. சேலத்திலிருந்து சென்னைக்கு மற்றுமொரு போகியை விடுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இரயில்வே கட்டணத்தை உயர்த்தியதற்காகக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேலம்-பெங்களூர் இரயில் பாதை போடும் திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்குமாறும், சேலம்-ஜோலார்ப்பேட்டை பாதையில் இரண்டாவது இரயில் பாதை போடுமாறும் இரயில்வே இலாகாவை கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேலத்திலிருந்து பெங்களூருக்கும், திருச்சிக்கும் துரித பஸ்களை விட ஏற்பாடு செய்யுமாறு ரோடு போக்குவரத்து அதிகாரியை கேட்டுக்கொண்டு மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ந. கி.)

சர்க்கார் பஸ் நிர்வாகமும், தொழிலாளர் துயரமும்!

சென்னை பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கண்டனம்

கடந்த 1—10—57 மாலை, சென்னை—இராயப்பேட்டையில், தோழர் கி. மனோகரன் தலைமையில் நடந்த சென்னை சர்க்கார் தீவிர பஸ் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் கீழே தரப்படுகிறது:—

கி. மனோகரன்

தலைமை தாங்கிய கி. மனோகரன் பேசியதாவது:—

"சர்க்கார் பஸ் தொழிலாளர்கள் பொதுமக்களுடன் அன்றாடம் தொடர்பு கொண்டுள்ளவர்கள். இந்தத் தொழிலாளர்கள் பொறுப்புணர்ச்சி யுள்ளவர்கள். அந்தப் பொறுப்புணர்ச்சியைக் காக்கும் பொறுப்பு பொதுமக்களுக்கும் இருக்கவேண்டும். இருசாராரும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொண்டால்தான் அமைதி நிலவமுடியும்.

"நயா பைசா குழப்பத்தின் காரணமாகத்தான் கண்டக்டர்—பொதுமக்கள் மோதல்கள் ஏற்படுகின்றன; இந்த நயா பைசா குழப்பத்தை அரசாங்கத்தாலும் தீர்க்கமுடியவில்லை; அரசாங்கம் இந்தச் சிக்கலை எப்படிச் சமாளிக்கப் போகிறதோ தெரியவில்லை; இதற்கு ஒரு பரிகாரம் தேவை.

"சர்க்கார் டிரான்ஸ்போர்ட்டில் உழைக்கும் டிரைவர்—கண்டக்டர்கள் காலை 6-மணி முதல் இரவு 9 மணிவரை வேலைசெய்துவிட்டு பஸ்ஸை 'ஷெட்'டில் கொண்டுபோய் விட்டவுடனே அவர்கள் வீட்டுக்குப்போய்விட முடிவதில்லை; அந்த நேரத்தில் அங்குள்ள அதிகாரிகள் அவர்களை மேலும் சிலவேலைகளைச் செய்யச் சொல்கிறார்களாம்; செய்ய மறுக்கும் தொழிலாளியை, வேலையை விட்டே நீக்கிவிடுவதாக மிரட்டுகிறார்களாம்; இப்படி அராஜகத்தை—பச்சையாக எதேச்சாதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள் சர்க்கார் அதிகாரிகள். இதன் விளைவாக வேலையிலிருந்தும் நீக்கப்பட்டிருக்கிறார்கள் சில தொழிலாளிகள்,

"அப்படி, அதிகப்படியாக வேலை செய்வதற்காகத் தனிப்பணம் ஏதாவது கொடுக்கிறார்களா என்றால், அதுவுமில்லை. இது ஜனநாயக சர்க்காருக்கு அடுக்குமா என்று கேட்கிறேன். இப்படி இரவு 2 மணி சுமாருக்கு வீடு சென்று படுக்கும் தொழிலாளர்கள் மீண்டும் 4 மணிக்கெல்லாம் எழுந்து வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளது.

"எனவே, இந்த நிலையில், தொழிலாளர்கள் கூட்டுணர்ச்சியுடன் பணியாற்றினால்தான் அவர்களின் கோரிக்கைகள் வெற்றிபெற முடியும்; ஒரே வழியில் பல பிரிவுகளாக இயங்கினால், கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய சக்தி சிதறுண்டு போகும். ஒரு தொழிலிலுள்ள அத்தனைத் தொழிலாளர்களும் ஒரே யூனியன் அமைத்துக்கொண்டால் அவர்களுடைய ஜீவாதார உரிமைகளைப் பெறலாம். நீங்களனைவரும் ஒரே குரலில் பேசவேண்டும்—உருவாகும் ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கவேண்டும்.

"நான் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவன் என்பதால் இந்த யூனியனை என் கட்சிக்குப் பலியிட்டு விடமாட்டேன். தி. மு. கழகம் வேறு—தொழிற்சங்கம் வேறு. என் தலைமையில் இயங்கும் யூனியன் கட்டுப்பாடானது; மற்றத் தொழிலாளிகளின் இதயத்தைத் தடவ ஆசைப்படுவது; நேர்மையானது.

"நாம் இந்த யூனியனை வளர்ப்பதன் மூலம் பிளவுபட்டுக் கிடக்கும் சக்திகளை இணைப்போம்."

காஞ்சி—கல்யாணசுந்தரம்

"எங்கள் இயக்கம், தொழிலாளர்பால் அனுதாபமும், அக்கறையும் உடையதே தவிர, நாங்கள் இதுவரை தொழிலாளர் சங்கம் எதிலும் நேரடியாகக் கலந்துகொண்டது கிடையாது. கலந்துகொள்ள வேண்டாம் என்ற எண்ணங்கொண்டுள்ள நாங்கள், கலந்துகொள்ள வேண்டிய கட்டாயத்தை உண்டாக்கிவிட்டார்கள் அரசியலார். அதன் எதிரொலிதான், இளவல் கருணாநிதி அவர்கள் விவசாயத் தொழிலாளர் சங்கத்திலும், நண்பர் மனோகரன் அவர்கள் இந்தச் சங்கத்திலும் பணியாற்ற முனைந்திருப்பது. இந்தத் தொழிற் சங்கத்தில் எந்த அரசியல் கோட்பாடு கொண்டவர்களும் இருக்கலாம். இந்தச் சங்கத்தை நாங்கள் எங்கள் கழகத்துக்காகப் பயன்படுத்த மாட்டோம் என்பதை இருதயபூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"எங்கள் மீது வீண் பழியும், அபவாதமும் சுமத்திச் சிலர் பேசி வருகின்றனர். 'முதலாளிகளின் முன்னோடிகள்' முதலாளிகளின் நல்வாழ்வுக்கென பாடுபடுபவர்கள் என்றெல்லாம் எங்கள் மீது அறிந்தோ அறியாமலோ, பழி சுமத்தப்படுகிறது. அதன் உண்மையைத் தெளிவுபட எடுத்துக்காட்டிவிட வேண்டும்—தொழிலாளி சுகத்தில் எங்களுக்கும் நாட்டம் உண்டு என்பதைக் காட்டத்தக்க மனோபாவத்துடன்தான் நாங்கள், இப்பொழுது தொழிற் சங்கங்களில் ஈடுபடவேண்டிய கட்டாயத்தில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறோம்.

"இந்த நாட்டு அரசியலாரைப் பற்றி நான் அதிகம் கூறத் தேவையில்லை; தனி நபர் தொழிற்சாலைகளில் தொழிலாளர் 'ஸ்டிரைக்' செய்கிறார்கள் என்றால் அரசியலார், தொழிலாளர்களின் குறைகளைப் போக்குவதில் அக்கறை காட்டமாட்டார்கள், மேலும் தங்களுக்கு வேண்டியவர்களின் தொழிற்சாலைகளிலே 'ஸ்டிரைக்' என்றால், போலீசாரைக்கொண்டு தொழிலாளர்களைத்தான் அடக்கப் பார்ப்பார்கள். அரசாங்க வேலை நிறுத்தம் என்றால்தான், அவர்களுக்குக் கொஞ்சம் அச்சம் ஏற்படும். தொழிலாளர்களுக்கு எவ்வளவு உறுதிமொழி கூற முடியுமோ அவ்வளவையும் கூறி, 'ஸ்டிரைக்' நடக்காதபடி தடுக்க முயற்சிப்பார்கள்.

"ஒரு அரசாங்கம், தான் நடத்தும் தொழில்கள் மூலம்தான், தனி நபர் தொழில்களுக்கு வழிகாட்ட வேண்டும். ஆனால் தேசியமயமாக்கப்பட்ட எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும், தனி நபர் ஸ்தாபனங்களைதான்; அரசியலாருக்கு வழிகாட்டும் துர்ப்பாக்கியமான நிலைமையை இந்த நாட்டிலே பார்க்கிறோம்.

"இங்கு பேசிய டிரைவர் ஒருவர் பஸ் தொழிலாளர்களை அடிக்கடி 'ரூட்' விட்டு 'ரூட்' மாற்றித் தொல்லை கொடுப்பதாக எடுத்துக் கூறினார். பொதுவாக எந்த ஊழியரையும் குறைந்தது 3 ஆண்டுவரை இடம் விட்டு இடம் மாற்றாமலிருக்க வசதியுண்டு. பஸ் தொழிலாளரைப் பொறுத்த

(4-ம் பக்கம் பார்க்க)

பஸ் தொழிலாளர் துயரம்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வரை, அவர்கள் எந்த 'ரூட்'டில் போனால் என்ன? ஒரே 'ரூட்'டில் ஒருவர் தொடர்ந்து போனால், அவர் என்ன மோசம் செய்துவிடுவார்? அவர்களைப் பற்றி அரசாங்கம் சந்தேகப்பட வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

"ஒரே 'ரூட்'டில் போவதால், இலஞ்சம் வாங்கிவிடுவார்கள் என்றோ, பஸ் வருமானத்துக்குப் பங்கம் தேடிவிடுவார்கள் என்றோ சொல்லிவிட முடியாது. அரசாங்கம் தன் தொழிலாளர்களைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கும் 'உயர்'வான கருத்து இதுதான்—இந்த எண்ணத்தை விட்டொழிக்க வேண்டும்; ஏழைகளை அப்படி இழிவாகக் கருதிவிடக் கூடாது.

"அரசாங்க பஸ் தொழிலாளர்களின் கஷ்டங்களை நாம் உணராதவர்களில்லை. அதே நேரத்தில், அந்தத் தொழிலாளர்களுக்கும் ஒரு சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். அவர்கள் பல கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு பணியாற்றுகிறார்கள் என்றாலும், இன்னும் கொஞ்சம் அதிகப் பொறுமையும், கண்ணியமும் அவர்களுக்குத் தேவை என்பதையும் கூறிக்கொள்ளவேண்டியுள்ளது.

"பஸ் அரசாங்க பஸ்ஸாக இருப்பதால் வெகு சீக்கிரம் புறப்பட்டுவிடும்; பாசஞ்சர்கள் ஏறுகிறார்களா, இல்லையா என்பதை அவர்கள் கவனிப்பதில்லை. இந்த நிலையே நீடித்தால், பஸ் தொழிலாளர்கள்படும் கஷ்டத்தைப் பொதுமக்கள் உணரமுடியாது போய்விடும். கண்டக்டர் ஒரே இடத்திலிருந்துகொண்டு டிக்கெட் கொடுக்கவேண்டும்; டிக்கெட் கொடுத்த பின்புதான் 'விசில்' கொடுக்கவேண்டும். அப்படியின்றி, கண்டக்டர் முன் பக்கத்தில் நின்று டிக்கெட் கொடுத்துக்கொண்டிருந்தால் — பின்னால் எல்லோரும் ஏறினார்களா இல்லையா என்பதைக் கவனியாமல் விசில் கொடுத்தால்—வண்டி புறப்பட்டுவிடுகிறது; பாசஞ்சர்கள் பஸ்ஸில் ஒரு காலும், தரையில் ஒரு காலுமாக வைத்துக்கொண்டு ஏறவோ, இறங்கவோ முடியாமல் அவதிப்பட நேரிடுகிறது. இந்தக் குறைபாடுகளையெல்லாம் தவிர்க்க தொழிலாளர்கள் முயற்சிக்க வேண்டும். அப்பொழுதுதான் பொதுமக்களும் அவர்கள்பால் அனுதாபம் காட்டுவார்கள்.

"வேலை செய்யும் சக்தி அதிகமாக இருந்தும், வேலை வாய்ப்பு இல்லையே எனக் கூறும் நிலைமை இருக்கும் வரை நாடு முன்னேற்றமடைந்ததாகாது. இந்த நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. இன்றைக்கு பஸ் 'ஸ்டிரைக்' என்றால் உடனே டிரைவர்கள், மற்றுய தொழிலாளர்கள் அரசாங்கத்துக்கு ஏராளமாகக் கிடைப்பார்கள். பல டிரைவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்; இந்த நிலைமை நாட்டில் இருப்பதால்தான், 'ஸ்டிரைக்' ஏற்பட்டால் கூடச் சமாளித்துவிடலாம் என்ற நம்பிக்கையில்—சர்க்கார் தைரியமாக—தொழிலாளர்களின் கூக்குரலைக் கவனிக்காமல் இருந்து வருகிறது.

"'ஒரு தொழிலுக்கு ஒரே தொழிற்சங்கம்'தான் இருக்க வேண்டும் என்று அரசியலார் கூறிவருகின்றனர். அப்படிக் கூறுவது நன்றாகத்தானிருக்கிறது; ஆனால், உண்மையில் நடைமுறையில் என்ன ஆகும் தெரியுமா? 'ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன்தான்' என்று கூறி, தங்களுக்கு வேண்டியவர்கள் நடத்தும் சங்கத்தைமட்டும் ஏற்றுக்கொண்டு, மற்றச் சங்கங்களைப் புறக்கணித்துவிடுவார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கும் சங்கம் எவ்வளவு குறைந்த அங்கத்தினர்களைக் கொண்டிருந்தாலும், அது எவ்வளவு குறைபாடுகள் உள்ளதாயிருந்தாலும், அதைக் கவனிக்கமாட்டார்கள். நியாயமான முறையில்—பெரும் அளவு அங்கத்தினர்களைக்கொண்ட சங்கங்கள் எல்லாம் புறக்கணிக்கப்படும்.

"எனவே, இன்றைய அரசியலார், தொழிலாளர்கள்பால் கொண்டுள்ள அக்கறை எத்தகையது, நாம் எத்தகைய முறைகளில் நம் கூக்குரலை எழுப்ப வேண்டும் என்பதையறிந்து தொழிலாளர்கள் பாடுபட வேண்டும்.

"எங்கள் இயக்கமும், எங்கள் பத்திரிகையான 'நம் நாடு'ம் எந்த நேரத்திலும் தொழிலாளர்கள்—அவர்கள் எத்தகைய அரசியல் கொள்கையுடையவர்களாயிருந்தபோதிலும்—நடத்தும் போராட்டங்களில் ஆதரவு கொடுக்கப் பின்வாங்கியதில்லை. அதேபோல் என்றும் நாங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம்."

மு. கருணாநிதி

"தொழிலாளர்களாகிய உங்களுடைய குறைகளை உங்களிடத்திலேயே எடுத்துக் கூறுவதற்குப் பதிலாக, எங்கள் இதயத்திலேயே பதித்துக் கொண்டிருக்கிறோம். அவற்றை எந்த இடத்திலே சொல்லிப் போராடினால் வெற்றி கிடைக்குமோ அங்கு சொல்லி, எங்களால் முடிந்ததைச் செய்வோம் என்ற உறுதியை உங்களிடத்திலே நான் கூறிக்கொள்கிறேன்.

"இந்த யூனியனுக்குத் தோழர் மனோகரன் தலைவராக இருப்பதிலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளருக்காக எந்த நேரத்திலும் கைகொடுத்துதவும் என்பது உறுதி. தி. மு. கழகம் தொழிலாளருக்காக உழைக்கும் மனோநிலையைக் கொண்டிருக்கிறது என்பதற்கும், அவர்களுக்காகக் கரங்கொடுக்கச் சித்தமாயிருக்கிறது என்பதற்கும் சான்றாகத்தான் மனோகரனை உங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். அவர் தலைமையிலே இயங்கும் இந்தச் சங்கம் மற்ற சங்கங்களைவிடச் சிறந்து விளங்குகிறது என்பதையறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மற்ற இரண்டு சங்கங்களில் ஒன்று—சீதாராம நாயுடு தலைமையில் இயங்கும் காங்கிரஸ் சார்புடைய சங்கம்; இன்னொன்று—தங்கமணி தலைமையில் இயங்கும் கம்யூனிஸ்டு சார்புடைய சங்கம்; ஆனால், மனோகரன் தலைமையில் இயங்கும் இந்தச் சங்கமோ, தி. மு. கழகச் சார்பில் நடப்பது அல்ல; தி. மு. கழகத்தைச் சேர்ந்த தீவிரத்தலைவர் ஒருவரின் கீழ் இயங்குகிறது என்பதுதான்.

"ஒழுங்காகச் சந்தா செலுத்தும் அங்கத்தினர்கள் கம்யூனிஸ்டுச் சங்கத்தில் 107—காங்கிரஸ் சங்கத்தில் 137—நம் மனோகரன் தலைமையில் இயங்கும் இந்த தீவிரத் தொழிலாளர் சங்கத்தில் 447 என்பதைக் கேள்வியுற்றதும் உள்ளபடியே மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். இந்த எண்ணிக்கையைக் கண்டு, பொதுமக்கள் தங்களுக்குத் தாங்களே புரிந்துகொள்வார்கள்—தி. மு. க. பங்குகொள்ளும் இந்தச் சங்கத்துக்குத்தான் அதிகச் செல்வாக்கும், சக்தியும் உண்டு என்பதை!

"தி. மு. கழகம் தன் வளர்ச்சிக்காகத் தொழிலாளர்களைப் பயன்படுத்திக்கொள்ள இந்தச் சங்கத்தை அணுகவில்லை; தொழிலாளர்களுக்கு தி. மு. கழகம் தன் உழைப்பை நல்குவதற்கே மனோகரனை அனுப்பிவைத்துள்ளது.

"அகில உலகத் தொடர்பு கொண்டுள்ள கம்யூனிஸ்டுக் கட்சியினரும், அகில இந்தியக் கண்ணோட்டம் கொண்டுள்ள காங்கிரசுக் கட்சியினரும், 'தி. மு. கழகத்தினர் குறுகிய நோக்கம்படைத்தவர்கள்' என்று வாதாடக்கூடியவர்கள்; ஆனால், அவர்கள் நடத்தும் சங்கங்களையெல்லாம்விட தி. மு. கழகத்தைச் சேர்ந்த மனோகரனைத் தலைமையாகக் கொண்ட இந்தச் சங்கம், அதிக எண்ணிக்கை அங்கத்தினர்களைக் கொண்டு சிறந்து விளங்குகிறது என்றால், இதன் உண்மையை மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்.

"இந்தத் தொழிலாளர்களுடைய குறைகளை நாங்கள் முன்பும் சட்டமன்றத்திலே எடுத்துரைத்திருக்கிறோம்; இனியும் எடுத்துரைத்து ஆவன செய்ய முயற்சிப்போம் என்பதுடன், சட்டமன்ற தி. மு. கழகத் தலைவர் அண்ணா அவர்கள் மூலமும், மற்ற தி. மு. கழக உறுப்பினர்கள் மூலமும் இந்தப் பிரச்சினைகளை சட்டசபையிலே எடுத்துரைத்து, இவர்கள் குறைகளைப் போக்க நானும், எங்கள் கழகத்தவரும் எல்லா வகையிலும் பாடுபடுவோம் என்று உறுதி கூறிக் கொள்கிறேன்."

டி. கண்ணப்பா

"நமது சர்க்கார் பஸ் போக்குவரத்து எக்கச்சக்கமான முறையிலே பணியாற்றிவருகிறது. ஒரு டிரைவர் 9-மணி நேரமும், மற்ற ஊழியர்கள் 8-மணி நேரமும் பணியாற்றுகிறார்கள். சில வேளைகளில் 10-மணி நேரம்கூட டிரைவர்கள் பணியாற்ற வேண்டியுள்ளது; '8-மணி நேர வேலை' என்ற சர்க்கார் திட்டம் என்ன ஆயிற்று? இதைக் கேட்டால், 'பஸ் போக்குவரத்து எமர்ஜன்சி-சர்வீஸ்; எபக்டிவ் சர்வீஸ்; ஆகையால், எப்போது கூப்பிட்டாலும் வேலைக்கு வரவேண்டும்' என்கிறார்கள்.

"சின்னஞ்சிறு பஸ் சர்வீஸ் கம்பெனிகளிலெல்லாம் வேலை நேரமும், மற்ற வசதிகளும் நல்ல முறையிலே அமைந்திருக்கும்போது, நம் சர்க்கார் பஸ் சர்வீஸ் மட்டும் இப்படி இயங்குவானேன்? 1935-ல் 17 முதல் 19 பேர்வரை ஏறும் பஸ்தான் பெரிய பஸ் ஆகும். இப்பொழுதோ அப்படி அல்ல; 60 பேர் ஏறும் பெரிய பஸ்களை, நெருக்கடியான நேரத்திலும் ஓட்டவேண்டியிருக்கிறது. முன்பு கொடுத்துவந்த 18 நிமிட நேரத்திலிருந்து இப்பொழுது 2 நிமிடங்கள்தான் கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், 'ஓவர்லோடு' ஏற்றக்கூடாது என்றிருக்கும்போது, 'எவ்வளவு வேண்டுமானாலும் ஓவர்லோடு ஏற்று' என்று இன்ஸ்பெக்டர் உத்தரவு போடுவார். சர்க்கார் நிர்வாகத்தில் ஒரு சட்ட திட்டம் என்பதில்லை; அதிகாரிகள் ஆளுக்கொரு உத்தரவு போடுகிறார்கள்; 'தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன்' ஆகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

"ஒர்க் ஷாப்பை எடுத்துக் கொண்டால் அதிலும் பல தொல்லைகள் கிளீனரிடம் மெகானிக் வேலை வாங்கப்படுகிறது; 25 வண்டிகளை ஏககாலத்தில் கொண்டுவந்து 'லைனப்' செய்துவிட்டு, வேலைவாங்குகிறார்கள்.

"சம்பளத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் அதிலும் ஓரவஞ்சனை காட்டப்படுகிறது. ஒரே தாயின் இரண்டு குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு நன்றாக உடை உடுத்தி அலங்கரிப்பதும், மற்றொரு குழந்தையை வெற்றுடம்பாக வைத்திருப்பதுபோல் ஒரே சர்க்காரின் நிர்வாகத்தில் இயங்கும் பஸ் போக்கு-வரத்தில் இரு வேறு சம்பள அளவுகள் இருக்கின்றன. நாகர்கோயிலில் உள்ள சர்க்கார் பஸ் தொழிலாளர்களுக்கு அதிக அளவும், சென்னையிலுள்ள பஸ் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவும் சம்பளம் கொடுக்கிறார்கள். ஏனென்று கேட்டால், 'நாகர்கோயில் தொழிலாளர்கள் படித்தவர்கள்' என்று காரணம் கூறுகிறார் மந்திரி வெங்கட்ராமன். தொழிலுக்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம்? படித்தவரும் படிக்காதவரும் ஒரே தொழிலைத்தானே செய்கிறார்கள்! இதில் ஏன் இந்த வேற்றுமை?

"மற்றும், பிராவிடண்ட் நிதி, கிராஜுவிட்டி வசதிகளிலும் சில கோளாறுகள் செய்யப்படுகின்றன. தொழிலாளர்களுக்குத் தங்கள் வீடுகள் உள்ள 'ரூட்'டில் செல்லுவதற்கு வசதியாக இருப்பதை மாற்றி, அடிக்கடி 'ரூட்'களை மாற்றிவிடுகிறார்கள். நாம் ஒன்றுபட்டுப் போராடினால்தான் இந்தக் குறைபாடுகளை—அநீதிகளை ஒழிக்க முடியும்."

'ஹோம்லண்ட்'

(HOMELAND)

★

Homeland — சென்னையிலிருந்து வெளிவர ஏற்பாடாகிவிட்டது; அதற்கான அனுமதி கிடைத்துவிட்டது; துவக்க வேலைகள் முடிந்து கொண்டு வருகின்றன.

Homeland—'நம் நாடு' அலுவலகத்திலிருந்து இனி வெளிவரும்.

Homeland இதழ் சம்பந்தப்பட்ட கடிதங்கள், மணியார்டர்கள், இன்ஷூரூர்கள், செக்குகள் முதலியன இனி,

சி. என். அண்ணதுரை,
Homeland அலுவலகம்
'அறிவகம்'—இராயபுரம்
சென்னை-13.

என்ற முகவரிக்கு அனுப்பக் கோருகிறேன்.

'திராவிட நாடு' சம்பந்தமானவைகளை, வழக்கம்போல் காஞ்சிபுரம் முகவரிக்கு அனுப்பவும்.

Homeland — சென்னையிலிருந்து அக்டோபர் 27-ல் வெளிவரும்.

வாசகர்களும், ஏஜெண்டுகளும், இந்த தாமதம் பொறுத்திட வேண்டுகிறேன்.

அன்பன்
அண்ணாதுரை

இந்தி எதிர்ப்பு நாள்—மாணவர்களுக்கு வேண்டுகோள்

தி. மு. க. போதுச்செயலாளர் அவர்கள் அறிக்கைக்கிணங்க அக்டோபர்—13; ஞாயிற்றுக்கிழமையன்று இந்தி எதிர்ப்பு நாளை, தி. மு. க. மாணவர் கிளைகள் அனைத்தும் சீரும் சிறப்புமாக நடத்தவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகின்றேன்.

அன்றையத் தினம் தி. மு. க. தோழர்கள் நடத்தும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களில், மாணவர் கழகத் தோழர்கள் குறிப்பிடத்தக்க அளவிற்குக் கலந்துகொள்ளுவதன் மூலம், மாணவர் கிளையின் பொலிவை மேலும் சிறப்படையச் செய்யவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அன்பன்,
டி. கே. பொன்னுவேலு
அமைப்பாளர்
தி.மு.க.—மாநில மாணவர் கிளை

அண்ணா விளக்கம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மதிப்பு உயரும். இஸ்லாத்தின் உயர்ந்த மார்க்கம் இன்று யாருக்குப் பயன்படுகிறது? இதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஆதிக்கக்காரர்களுக்குப் பயன்படுமானால்—ஏழையை ஐயோ என்று கதறவைப்பவர்களுக்குப் பயன்படுமானால் அதில்—இந்த உயரிய மார்க்கத்தின் பலன் இல்லை. இவ்வுயரிய மார்க்கம் அக்கிரமத்தை அழிக்கப் பயன்படவேண்டும்; உலகத்தில் நல்ல தோழமையை உண்டாக்குவதற்குப் பயன்பட வேண்டும். என்றைக்கு இந்நோக்கங்களுக்கு இம்மார்க்கம் பயன்படுகின்றதோ அன்றைக்குத்தான் மார்க்கத்தின் முழுப் பலன்களையும் அடையமுடியும்."

விழாவிற்கு வருகை தந்த பொதுமக்கள் அனைவருக்கும், மன்றத் தலைவர் தோழர் எம்.எம். அபிமுகம்மது வரவேற்புரையாற்றினார். இறுதியில் மன்றச் செயலாளர் தோழர் இரசீத் முகம்மது நன்றி கூறினார்.

கூட்டத்தில் மறைந்த கவர்னர் திரு. ஜான் அவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

சென்னை 16-வதுவட்டம்:
தி. மு. கழகக் கிளை 2-ம் ஆண்டுவிழா
பெருமாள் கோவில் தோட்டம் முதல் சந்தில்
11—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: வ. பா. சின்னையா
பேசுவோர்:
என். வி. நடராசன்
கி. மனோகரன்
வி. எஸ். கோவிந்தராசன்
சி. பஞ்சாட்சரம்
ப. ஆசைமுத்து
கு. நாகராசன்

★

சிவகாசி:
மாரியம்மன் கோவில் முன்பு
12—10—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ஏ. சுப்பையா
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
எம். எஸ். இராமசாமி

★

புலவன்காடு:
காளியம்மன் கோவில் திடலில்
12—10—57 மாலை 5 மணிக்கு
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
ஆ. துரையரசன்
பி. வி. இராசன்

★

புதுப்பேட்டை:
(தெ. ஆ. மாவட்டம்)
தேவாரமடம் அருகில்
12—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: இர. தென்றல்
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
கே. சபாபதி

சென்னை--தண்டையார்ப்பேட்டை கே. வி. கே. சாமி படிப்பகப் பொதுக்கூட்டம்

11—10—57 மாலை 6 மணிக்கு தண்டையார்ப்பேட்டை சிங்கார வேலர் திடலில் தோழர் முத்து கிருட்டினன் தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., என். சீவரத்தினம், வி. எஸ். கோவிந்தராசன், ஆர். ஜார்ஜ், டி. பி. சுந்தரம், ஆகியோர் பேசுவர்.

சென்னை-ஆயிரம்விளக்கு சிந்தனையாளர் கழகம்

11—10—57 மாலை 6-30 மணிக்கு மேற்படி கழகப் பணிமனையில், தோழர் க. முருகேசன் தலைமையில் "உலக சிந்தனையாளர்கள்" என்ற பொதுத் தலைப்பின்கீழ் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும்; பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் "காந்தியும்—காந்தீயமும்" என்ற பொருள்பற்றியும், தோழர் வே. கபிலன் அவர்கள் "இலக்கியத்தில் சிந்தனையாளர்கள்" என்ற பொருள் பற்றியும் பேசுவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24: சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.